அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல். எம். எல். ஏ.

ஒளி 2 : : 4-1-63 வெள்ளி : கதிர்-43

உள்ளே
"நான் கண்ட
-அண்ணா"
கலைஞரின்
"சிறைநினைவு"

உயரப்பன் சுபாவம்!

"அடாடா! உமக்காகத் திங்கு வந்துவிட்டது. உயரப்பரே! நானிருக்கிறேன். அடியாட்கள் எத்தனைபேர் வந்தாலும் சரி. அஞ்சாதீர்! என் உயிரைக் கொடுத்தும் உம்மைக் காப்பேன்- நமது தெருவில், எவனோ ஒருவன் வம்புக்கு வருவதா? ஒட்ட நறுக்குவோம் அவன் வாலை! ஒரு நூக்கும் பயப்பட வேண்டாம். இந்தாரும் தாலி! என்ன பார்க்கிறீ ? இதுதான் என் வீட்டிலுள்ள தங்கம்! இதோ, காசு...காலணா அரையணாவாக யிருக்கிறதே என்று பார்க்கிறீரா? நான் எங்கே போவேன் கிழித்துச் கிழித்துச் 'செக்' தர! என து உயிர், பொருள், யாவையும் தருகிறேன் என்னடா, இத்தனை நாளும் இவனைக் கண்டால் ஏடா! போடா! இளிச்சவாயா! என்போம். ஏசுவோம், பேசுவோம். அவன் இப்படி அன்பைப் பொழிகின்றானே என்று உமக்கு வியப்பாயிருக்கலாம். நிலைமை புரிந்தவன் நான! இன்று உமக்கு வம்பு என்றால் அது எனக்கும்தான். ஊரில் நீதியைச் சாய்க்க ஒரு பயல் றாழை சிறான் என்றால் அவனை உதைத்துப் புத்தி புகட்ட வேண்டும்—இதில் நீயா நானா என்ற பேச்சுக்கு இடமில்லை!"—என்று பேசக்கூட நேரமில்லை, அந்த ஏழைக்கு! எங்கெங்கோ ஓடினான், இடியாப்பம் வித்தகாசு இது, மூட்டைத் தூக்கியதில் வந்த கூலி, மூலையில் கெஞ்சிக் கேட்டு வாங்கியபணம் என்று ஒவ்வொருநாளும்கொண்டு போய்க் கொடுத்தான! ஊரே கூட, 'இவனுக்கென்னப்பா? நேற்றுவரையில் இவன் தலையில் மிளகாய் அரைத்தான் உயரப்பன், அவனுக்குப் போய் இந்த ஓடப்பன் இப்படியெல்லாம் உதவி செய்கிறானே! என்று வியந்தது!!

வியப்பு, பேச்சு, பாராட்டு எதுவும் ஓடப்பனின் உற்சாகத்தைக் குறைக்கவில்லை! பொது எதிரியை நசுக்க வேண்டும் என்கிற கவனம் அவன் எண்ணம் உயிர் அணு ஒவ்வொன்றிலும் ஊசலாடிற்று!!

உயரப்பன் எதையும் மறுக்கவில்லை. வாங்கியும் கொண்டான். வரிசைப்பல் தெரிய, மனதார ஓட்டப்பனை வாழ்த்தவும் செய்தான்! வஞ்சனையிலாத வாழ்த்துக்களே வந்தன அவன் வாயிலிருந்து.

இருந்தாலும் ஒருநாள்! திடீரென்று தன்வீட்டுத் தம்பிகளை இரகசியமாக அழைத்து, "தம்பிகளே! ஓடப்பன் நமக்கு ஒத்துழைக்கிறான், சரி. ஆனால் அவன உயிரோடிருப்பதுஎனக்கு அவமானமாயிருக்கிறது. அவனை ஒழித்துவிட்டால் என்ன?' என்று ஆலோசனை செய்யலானான், உயரப்பன்!!

தம்பிகளுக்கும் ஓடப்பன் மீது வெகுநாளாகக் கண் உண்டு. அதற்குக் காரணம் ஓடப்பன் ஏழையென்றாலும், அவன குணம் கண்டு அந்த ஏழையைக் காதலித்தாள் இன்னொரு ஏழையான மனமாலை! அவள் உயரப்பனுக்கும் சொந்தக்காரர்தான். ஆனாலும், பாழும்மனம் அவளுக்கு ஓடப்பன் பக்கம் சென்றது!!

ஓட்டப்பனைத் தொலைத்துவிட்டால் அம்மாலை பிறகு யாருக்கு? என்று எண்ணினர் தம்பியர்!

அதனால், "ஆமண்ணா. ஓட்டப்பனை ஒரேயடியாக ஒ நகை பார்க்க வேண்டியதுதான்" என்றனர்.

ஆனால் மறந்தனர், வந்து வாலாட்டுகின்ற பொது எதிரியை! அவனை ஒழிக்கக் கள்ளங்கவடில்லாமல் பாடுபடுகிறானே அந்த ஏழை என்பதை!

இந்த மனம் உயரப்பர்களுக்கு மட்டுமே உரியது போலும்!! உயரப்பரானதால் ஏற்படும்

அரங்கண்ணல்

தி.மு.க. வார இதழ்

போலும்!!!

ஓட்டப்பனிடமும் இச்செய்தி எட்டியது! அவன் சிரித்தான்.

"என் கதை பிறகு இருக்கட்டும்! இப்போது எதிரியை முதலில் விரட்டுவோம். அதற்குள், என்னைப்பற்றி எமனுக்கு அச்சம் வரவேண்டும்? இதுதானு ஊர் காக்கும் பண்பு! ஊரில் குடியிருப்பவன்தானே நானும்! என்னை ஒழித்துவிட்டு நீ என்ன இன்பம் காணப்போகிருய்? அப்படியே இன்பம் அனுபவித்தாலும் நாளைக்கு வரப்போகும அடியாட்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவது யார்! அவனுக்கு அல்லவோ நமக்குள்ளிருக்கும் கோளாறை எடுத்துச் சொல்கிருய். இதுவா இதற்கு நேரம்? இதுவா இதற்குச் சமயம்?" என்று கேட்டான்!!

யார்தான் அவனுக்கு என்ன பதில் சொல்ல முடியும்?

ஏன், நீங்களே சொல்லுங்கள். ஓடப்பன் காட்டிய அன்புக்கு இதுதான் பரிசா! அமுதுகொடுத்தவனுக்கு அளிக்கலாமா நஞ்சு! கனி தந்தவனுக்குக் காஞ்சிரங்காயோ அளிப்பது!

அட, கொஞ்சம், 'கைஉலர்ந்த பிறகாவது, கடுகடுப்பையும் சிடுசிடுப்பையும் காட்டலாகாதோ!!

* * *

குமுறும் காமராசர்! கொஞ்ச காலம் காங்கிரஸ் அதிபராயிருந்த சஞ்சீவியார்! இருவருக்கும் நண்பரான நிசலிங்கப்பா! கேரளத்துச் சங்கர்!—ஆகியநால்வரும், அவர்களுக்கு மூத்த லால் பகதூராரின் தலைமையில் குமரிமுனையில் கூடி கொட்டுவோம் தி. மு. கழகத்தை என்று இந்த கிழமை முடிவெடுத்தனராம்.

முடிபுனைந்துள்ள முதலமைச்சர்கள் இவர்கள்! காங்கிரஸ் கட்சியை அந்தந்த மாநிலங்களில் வளர்ப்பவர்களும் இவர்கள் தான்!!

"விஷயம்தெரியுமோ? அண்ணுதுரை கட்சி ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர் விடுகிறது. அது பிடிக்கலே. காமராசருக்கு. 50 பேர் வந்தவர்கள், அடுத்த எலெக்ஷனிலே ஆட்சியையேப் பிடிச்சிட்டா: என்ன செய்றதுன்னு அச்சம்? அதனுலேதான் இதெல்லாம் நடக்குது..." என்று பேசுவார்கள்! திறந்த கண்களுக்கு இதுதான் தெற்றெனப் புலப்படும்!!

"பாருய்யா, வேடிக்கையை! என்னைக்கு ஆந்திர கன்னட கேரள தமிழக முதலமைச்சர்கள் கன்யாகுமரியிலே கூடி கழகம் பற்றிமுடிவெடுத்தார்களோ, அன்றைககே சேலத்தில் தி. மு. க. பொதுக்குழு கூடியிருக்கிறது. தடைசெய்ய வேண்டும் என்று காங்கிரஸ் முதல் மந்திரிகள் முடிவெடுக்கிருர்கள் அங்கே! அதே நாளில் இங்கே கூடிய தி. மு. க. பொதுக்குழுபண்டித நேருவின் கையைப் பலப்படுத்துவோம் என்று முடிவு செய்திருக்கிறது!! உன்னை அடிப்போம் என்கிருர்கள் காளைமாட்டுக்காரர்கள். அடிக்கின்ற கைக்கு ஆதரவு தருகிருேம் என்கிருர்கள் உதயசூரியன்காரர்கள்! அது காங்கிரஸ்! இது தி. மு. க!! என்றும் பேசாமலிருக்கமாட்டார்கள், மக்கள்.

இப்போதுதான் மக்கள் எதையும் உடனுக்குடன் அலசி ஆராய்ந்து நல்ல தீர்ப்பு வழங்கக் கற்றுக் கொண்டு வருகிருர்களே! விமர்சனமும், விவேக உரைகளும் இல்லாத திண்ணைகள் கிடையாதே, இப்போது!!

200மைல் எல்லையில், திபேத்தில் சீனுக்காரன் பெருத்த அளவில் படைகளைத் திரட்டிக் கொண்டிருக்கிருன். இப்போது!!

—இதனை, நாம் சொல்லவில்லை. நாள் இரண்டுக்கு முன்னுல் நவின்றிருககிருர், நாடாளும் பண்டிதரின் புதல்வியும், டில்லி மக்கள் பாதுகாப்புச் சபைத் தலைவியுமான திருமதி இந்திராகாந்தி.

தேசத்துக்குவந்த ஆபத்து போய்விட்டதாக எண்ணி நமக்கென்ன என்று இருக்காதீர்கள். இனிதான் நாம் விழிப்போடு இருக்க வேண்டும்! போருண்டோ இல்லையோ, நாம் அனைவரும்போரின் நெருக்கடியிலேயே பல ஆண்டுகளு வாழத் தயாராயிருக்க வேண்டும்"-

என்கிருர், எச்சரிக்கிருர்,வேதனையுடன் விளக்குகிருர், 'விவேகி' என்பதை இச்சமயத்தில் நிரூபித்து எல்லோரையும் தன் அணியில் திரட்டிக் கொண்ட பண்டித நேரு அவர்கள்.

"நாங்கள் போர் நிறுத்தம் பற்றி அறிவிப்பு விடுத்தோம். இன்னும் இந்தியா அதனை ஒப்புக்கொண்டு பதிலுக்குப்போர் நிறுத்தம செய்ததாக அறிவிக்கவில்லை, மறுபடியும் நாங்கள் போரைத் தொடுப்போம்" என்று சீனு மிரட்டுவதாக இன்றைய தினம் வந்த செய்திகள் கூறுகின்றன!!

இந்தியாவின் சார்பில் சர்தார் சுவரண்சிங் சென்ருர், பக்கத்திலிருக்கும் பாகிஸ்தானுடன் காஷ்மீரம் பற்றிப் பேசி, நட்புறவைப் பலப்படுத்துவதற்காக! இவர் போய் இறங்குவதற்குள் சீனு, பாகிஸ்தானுடன் நேச உடன்படிக்கை செய்து கொள்கிறது!

அந்தளவுக்கு இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு எதிர்நடவடிக்கை யெடுப்பதும், இன்றில்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு என்று தனது மக்களை வெறிகொள்ளச் செய்வதுமாக. விரோதம் வளரும் செயல்களைத் திட்டமிட்டு செயகிறது சீனு.

போர் மேகம் கலைந்துவிடவில்லை—நாமும் அசட்டையாகயிருக்கும் நிலையில் இல்லை—எங்கு பார்த்தாலும் நிதிவசூலும் படைக்கு ஆள் சேர்த்தலும் நடக்கிறது — அமெரிக்காவிடமும் பிரிட்டனிடமும் 'பேரம்' பேசிக் கொண்டிருக்கிருேம் ஆயுதங்களைப் பெற—பற்பல ஆயுதச் சாலைகளை, ஆலைகளை அமைக்கவும் முயன்று கொண்டிருக்கிருேம்!

நெருக்கடியான இந்த நேரம் பற்றி, குமரிக்குச் செல்லுமுன் நாகர்கோயிலில பேசிய லால்பகதூர் விளக்கமாகச் சொல்லியிருக்கிருர். விடோம்! ஒருகை பார்ப்போம்! சோர்வுராதீர்! நிதி தாரீர்! என்று அவரைப் போலவே, அன்பர் காமராசரும், அண்டை மாநில முதல்வர் சஞ்சீவியாரும் முழங்கியிருக்கிருர்கள்.

இருந்தும் குமரியிலேகூடி, தி. மு. கழகம்பற்றியே பேசியிருக்கிருர்கள்!!

தி. மு. கழகம் இந்த நெருக்கடியான நேரத்தைத் தன் கட்சி வளர்ச்சிககுப் பயன்படுத்தவில்லை. சிறைக்குள் சித்திரவதைகளைப்பட்டு வெளியே வந்தது அது! பட்ட புண்களைத் துடைக்கவும் நேரமில்லை, பண்டித நேருவின் உருக்கமான பேச்சு கேட்டு, உயிர் பொருள் ஆவி அனைத்தையும் போருக்கென்று கேட்டுப்பெற்றுஅளித்து வருகிறது!!

"ஆகா! ஆகா!! மாட்டிக் கொண்டார்கள் காங்கிரஸ்காரர்கள். எரிகிற வீட்டில் பிடுங்கினது ஆதாயம். இருக்கும் ஐந்து லட்சம் உறுப்பினர்களும், இரகசியமாகச் சீனுவுடன் பேரம் பேசுவோம். அவன் தயவால் இவர்களை அகற்றுவோம்," என்று கிஞ்சித்தும் எண்ணவில்லை.

காங்கிரசுக்குஎதிர்க்கட்சிதான் தி. மு. க!

ஆனுல், எதிரிகள் கட்சி அல்ல!!

இந்தச் சமயத்தில், அணுவளவும் சஞ்சலத்தை ஆள்வோருக்கு வைக்கச்கூடாது என்கிற பெருந்தன்மையுடன் திராவிட நாடுப் பிரச்னையைப் பற்றிப் பேசுவதில்லை, என்றுகூட ஒத்திவைத்திருககிருேம் நாம்.

அப்படியிருக்கும்போது, இப்போது, தி. மு. கவைப்பற்றிச்சிந்தித்து, அச்சிந்தனையைச் சட்டமாக வடித்துக் கொட்ட வேண்டிடே அவசியம் என்ன, அவசரம் என்ன.

போர் ஏற்பட்டது என்றதும் பூரிக்கிருன் கள்ளமார்க்கெட்காரனும், கொள்ளை லாபக்காரனும்! அதேபோல இயன்ற லாபத்தைச் சுருட்டுவோம் என்று அரசியல் கட்சியான காங்கிரசும் ஏனைய கட்சிகளை ஒடுக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தப் பார்ககிறது என்றுதானே உலகம் சொல்லும்!!

எதிரியை அடி! துரோகியை ஒழி! கங்காணியைப் பொசுக்கு!

8-ம் பக்கம் பார்க்க)

இந்த இதழ்...

பொங்கல் மலர் வேலைகளின் காரணமாக இந்த இதழ் 8 பக்கங்களில் வெளிவருகிறது! தோழர்கள் பொறுத்தருள்க.

நிர்வாகி

'அறப்போர்'

பிப்ரவரி 1 வெளி வருகிறது!

அண்ணாவின் அணிவகுப்பில்

ஆற்றல் மிகுந்த படைக்கலன்!

தென்னகம்

வார இதழ்

ஆசிரியர்: K.A. மதியழகன் M.L.A.

தனி இதழ் 16 காசு.

ஆண்டு சந்தா 8 ரூ.

* எல்லா இடங்களுக்கும் முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

'தென்னகம்' 126. மவுண்ட் ரோடு, சென்னை-6.

சந்தா விவரம்
ஆண்டு சந்தா ரூ 8-00
6 மாத சந்தா ரூ 4-50
மூன்று மாத சந்தா கிடையாது

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒருவர் சிரிக்கிறார் அதனால் பலர் அழுகிறார்கள் என்றால், அது ஆணவச் சிரிப்பு, அழிய வேண்டிய சிரிப்பு.

ஒருவர் சிரிக்கிறார், அதனால் பலர் சிரிக்கிறார்கள் என்றால் அது அன்பு சிரிப்பு, அதுதான் சிரிக்கவேண்டிய சிரிப்பு.

—அறிஞர் அண்ணா

ஒளி - 2 கதிர்- 43 || வெள்ளி 4-1-63 || 8 பக்கம், 16 காசு

நமது கடமை

சகோதரர்களே

நமது தலைவரின் ஆணைப்படி நாம் அனைவரும் போருக்கு உதவும் பொறுப்பான முயற்சிகளில் இதயசுத்தியோடு ஈடுபட்டு வருகிறோம்! இத்தனை நாளாகப் பேசி வந்த 'திராவிட நாடு கோரிக்கை'யைக்கூட ஒத்தி வைத்திருக்கிறோம் என்றால் நம்முடைய பெருந்தன்மைக்கும் கண்ணியத்துக்கும் அதைவிட இந்தமண்ணின் சுதந்திரத்தைக் காப்பதில் நமக்குள்ள ஆர்வத்துக்கும் ஈடு இணையுண்டோ!!

நமது இதயசுத்தியான இந்த முயற்சியை அரசியல் அவசரக்காரர்களால் ஜீரணிக்க முடியவில்லை. நம்முடைய பெருந்தன்மையை வாயாரப் பாராட்டும் மனப் பக்குவம்கூட அவர்களுக்கு உண்டாகவில்லை. நம்முடைய போர்க்கால முடிவை 'இந்து', 'மித்திரன்', 'மெயில்' போன்ற எரிச்சல் ஏடுகள்கூடப் பாராட்டியுள்ளன, உலகமே நமது, அரசியல் மேதை அறிஞர் அண்ணாவின் கூர்த்தமதியும், நேரிய போக்கும் கண்டு நெஞ்சார வியக்கின்றது. ஆனால் அவருக்கு சிறுநன்றி செப்பும் துணிவோ—ஒரு மாபெரும்எதிர்க்கட்சியின் தலைவரைப் பாதுகாப்புக் கவுன்சிலில், யார் யாருக்கோ இடம் கொடுத்திருந்தும், அழைத்து ஆலோசனைகளை பெறவில்லை அச்சத்தை அரசியல் வாழ்விலே கொண்டமர்கள்! ஆனாலும் அம்மேதைதன் தம்பிகளை அனுப்பித் தான் மக்கள்மூலமும் அவர்கள் கருத்துக்களைச் செம்மைப் படுத்தும் பிரசாரத்திலும் ஈடுபட்டு வருகிறார்கள்!!

சொந்த விருப்பு வெறுப்புகள் கொஞ்ச நாளில் இறந்து போய் விடும். ஆனால் 'நாடு' இறந்தால், சீரழிந்தால் செப்பனிட ஆண்டுகள் பலவாகும். பொதுவாழ்வு, தனிமனிதனின் ஆட்டக்கூடமல்ல; கோடிக் கணக்கான உயிர்களின் வாழ்வு மேடை!—இதனை நன்குணர்ந்த நமது மாபெருந்தலைவர் சலனமில்லால், சரியென்று நீதி ஒப்புவதை, நெஞ்சார ஏற்று, நம்மை வழிநடத்திச் செல்கிறார்.

இந்த நேரத்தில் நமது கவனத்தைத் திருப்ப வதந்தியாளர்கள் பலபடப் பேசலாம், வம்பர்கள், நமது திசையைத் திருப்ப திருகுதாளங்கள் செய்யலாம்!! அவர்கள் நமது நன்மைக்காக என்று யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்? கிடையாதே! அதனால் வெற்றுரை வீசுங்கள் குப்பைத் தொட்டியில்! நம் கவனம்—சிந்தனை—செயல் யாவும், 'சனநாயகத்தைக் காக்கும் இந்த போருக்கான முயற்சி'களிலேயே செல்லட்டும்! வேறு பேச்சு வேண்டாம்—சனநாயகம் சாகாமலிருக்கும் தத்துவப் போருக்கான உதவிகளைத் திரட்டுவதிலேயே இருக்கட்டும்!!

பொதுக்குழு

வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி, அன்பால் ஆர்வத்தால், குடும்ப பாசம் எனும் கோட்டைச் சுவர் கொண்டு, பலமான எதிர்க்கட்சியாக இயக்கத் தோழர்களால் தலைநிமிர்ந்து நிற்கின்றது திராவிட முன்னேற்றககழகம்! அதன் தன்மைகளையும் சிறப்புகளையும் விளக்க சேலத்தில் கூடிய பொதுக்குழுவில் அது நிறைவேற்றியிருக்கும் பின் கண்ட தீர்மானங்களே தக்க சான்றாகும்.

* போர்ச் செலவுக்கான பணம்தேடும்வகைக்காக நிர்வாகச்செலவினத்தில் சிக்கனத்தைக் கையாள வேணடுமென்று இபபொதுக் குழு, அரசினரை கேட்டுக் கொள்வதுடன், மாநிலங்களிலும், மத்திய அமைப்பிலும் உள்ள மேல் சபைகளை எடுத்துவிடுவதன்மூலமும், ஒல்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு கவர்னர் என்றிருக்கும் முறையை நீக்கிவிட்டு,மண்டலத்துக்கு ஒரு கவர்னர் என்றமுறையைப் புகுத்துவதன் மூலமும் கூடச் செலவினைச் சுருக்க இயலும் என்பதை இப்பொதுக்குழு தெரிவித்துக் கொளகிறது.

* நாட்டுப் பாதுகாப்புக்கு அடிப்படையாகஅமையும் உணவு உற்பத்திப் பெருக்கத்தை நோக்கமாகக் கொண்டு செயல்படும் அரசு, விளைநிலமாகக்கூடிய நிலங்கள் தரிசாகக் கிடப்பது நாட்டுக்குப் பெரிய நஷ்டம் என்பதை உணர்ந்து, நிலமற்ற ஏழை உழவர்களுக்கு—குறிப்பாக ஆதித்திராவிட மக்களுக்கு, இந்த நிலங்களை வழங்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அரசினரை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

* சிறப்புப் பயிற்சிபெற அமெரிக்கா சென்ற சென்னைத் தோழர் சுப்பிரமணியம் என்பவருக்கு அமெரிக்காவில் பால்டிமூர் என்னும் ஊரின் விடுதியினர்,நிறவேற்றுமை காரணமாக உணவளிக்கமறுத்த போக்கை இப்பொதுக்குழு கண்டிக்கிறது. அங்குள்ள இந்தியத் தூதரகம் இதுகுறித்து மேற்கொண்டு விளக்கம் கேட்பதுடன், கண்டனக் குறிப்பை அந்நாட்டு அரசினருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகிறது.

* மத்திய அரசு, தங்கத்தைப் பொறுத்துப் போர் நெருக்கடியின் காரணமாகவும், வெளிநாட்டுச் செலாவாணியின் காரணமாகவும் தற்போது எடுத்துவரும் நடவடிக்கைகள், சரிந்துவரும் ஆயிரக் கணக்கான ஆபரணத் தொழிலாளர்களை வேலையிழக்கச் செய்திருப்பதால் வேலை இழந்து வாடுவதை மாநில, மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புக்கள் தரத்தக்க ஏற்பாட்டை செய்ய வேண்டுமென இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

* வங்கம், அசாம் மாநிலங்களுக்கு வழக்கமாக அனுப்பிக் கொண்டிருந்த கைத்தறித் துணிகள், போர்நிலைக் காரணமாகப் பெரும் பகுதி ஏற்றுமதி தடைப்பட்டிருப்பதால் தமிழகத்தில் கைத்தறித் துணி தேக்கமடைந்துள்ளது. குறிப்பாக சேலம், கோவை மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலையில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. புதிதாக இலங்கை அரசுடன் இந்தியா செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் மூலம் ஏற்றுமதி நடைபெற்றாலும் இப்போதுள்ள நெருக்கடி தீராது. ஆகவே தேக்கமடைந்துள்ள கைததறித் துணிகளை அரசாங்கம் கூட்டுறவு சொசைடி மூலம் கொள்முதல் செய்து, நெசவாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பொதுக்குழு அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறது.

* * *

டி. கே. சி. அன்னை மறைவு

நமது இயக்கத்தின் அருமைச் சகோதரரும், ஆற்றல்மிகு எழுத்தாளரும் பேச்சாளருமான திரு டி. கே. சீனுவாசன் அவர்களின் அருமையன்னையார் ஆனந்தவல்லியம்மாள் அவர்கள் இந்த கிழமை இயற்கையெய்திய செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். அடக்க உணர்வும், கழகப் பற்றும் கொண்ட நமது நண்பருக்கு ஏற்பட்ட துக்கத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்!!

—0—

சிறை நினைவு

பிணைச் சகோதரருக்கு,

இந்திய மண்ணைச் சீனவெறியர்கள் வளைத்துக் கொள்ள வாய் பிளந்து நிற்கும் இந்த நேரத்தில் இந்திய சர்க்காரின் கரத்தைப் பாதுகாப்புத்துறையில் பலப்படுத்தவேண்டும் என்பது திராவிடமுன்னேற்றக் கழகத்தின் நோக்கமாகும். சர்க்காரை இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி நடத்துகிறது. அந்தக் கட்சி சர்க்காரின் அலட்சியப் போக்கால் நாட்டில் விலைவாசிக் கொடுமை விரிவடைந்தது.

அதனைத் தடுக்க அறவழிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் போராடியது. அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அடக்குமுறைக்கு ஆளாக்கியது காங்கிரஸ் அரசு! காமராசர் ஆட்சி! அந்த அடக்குமுறை வேதனைகளை வெளியிடுவதால் போர்ச்சூழ்நிலையில் பொதுமக்களுக்கு சர்க்கார் மீது அதிருப்தி ஏற்படக்கூடும் ஆனால் அதற்காக, கழகத்தின் வரலாற்றை மறைத்துவிட்டேன் என்ற குற்றம் ஒருகாலத்தில் என்மீது சாட்டப்படக்கூடாதல்லவா? ஆகவே அடக்க உணர்ச்சியுடன் அந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதில் தவறில்லையென்று கருதுகிறேன்.

எனது சென்ற கடிதத்தில் திருச்சி சிறைச்சாலையில் என்னுடன் இருந்த தோழர்கள் சிலருக்கு ஏற்பட்ட தியாக வடுக்கள் பற்றி எழுதியிருந்தேன். இந்தக் கடிதமும் கண்ணீரில் தோய்ந்த எழுத்துக்களைத் தாங்கி வருகின்றது.

1959 ஆம் ஆண்டு சென்னையில் மாநகராட்சிமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது.

வழக்கமாக மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல் எனினும் அந்தத் தேர்தல் ஒரு புதிய திருப்பு முனையைத் தமிழகத்தில் ஏற்படுத்தியது. பல ஆண்டுகாலமாக சென்னை மாநகராட்சியைத் தன் கைக்குள் வைத்துக்கொண்டிருந்தவர்கள் காங்கிரஸ் சீமான்களும், குட்டிக் குபேரர்களுமேயாவார்கள்.

ஆனால், 1959-ல் அந்த மகுடபதிகளின் ஆட்சி கவிழ்ந்து மாநகராட்சி மன்றம் மண் குடிசைக்காரர்களுக்குச் சொந்தமாயிற்று! மாநகராட்சி மன்றத்தில் மேயர் அமரும் நாற்காலியிருக்கிறதே, அது செட்டிநாட்டு அரசரால் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் செய்யப் ட்டது. மேயர் அணிந்துகொள்ளும் தங்கச் சங்கிலி மிக விலை உயர்ந்தது. அந்த ஆடம்பரமான சிம்மாசனத்தில் அமரவும், அழகுமிழும் தங்க அணியைப் பூணவும் ஏழைக் குடிமகனுக்கு உரிமை உண்டு என்பதை திராவிட முன்னேற்றக்

கழகம் மெய்ப்பித்துக் காட்டியது கழகத்தின் உறுப்பினர்களான மிகச் சாதாரண குடும்பத் தோழர்கள் வரிசையாக மேயர் நாற்காலியில் அமர்ந்து சென்னை மாநகராட்சிக்குக் கீர்த்தியைத் தேடிக் கொடுக்கத் தொடங்கினர்.

நூறு உறுப்பினர்களைக்கொண்ட மாநகராட்சியில் கழகத்தினர் நாற்பத்தி ஐந்து பேர்!

இடையே எழுந்த துரோகச் சக்திகளின் குழப்பத்தால் நாலைந்து உறுப்பினர்களை நாம் இழக்க வேண்டியதாயிற்று. மிச்சமுள்ள உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நமது கழக மேயரே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். சுயேச்சைகளும் முற்போக்குவாதிகளும் கழகத்தின் பணியில் கொண்டுள்ள நல்ல எண்ணத்தின் காரணமாகவே மேயர் தேர்தல் வெற்றிகள் நமக்குக் கிடைத்துவருகின்றன. அப்பப்பா, எத்தனை எதிர்ப்புகள்! எவ்வளவு இன்னல்கள்! எந்த அளவு துரோகம், எங்கெங்கேயிருந்து கிளம்பும்! அத்தனையும் சமாளித்துக் கழகம் வெற்றி பெறும்போது நாம் பெறும்மகிழ்ச்சிக்கு எல்லை உண்டா? அந்த மகிழ்ச்சி, பாலைவனத்துப் பயணத்தில் கிடைத்திட்ட பேரீச்சை மர நிழல்போல அல்லவா இனிமை அளிக்கும்.

அந்த வெற்றிக்குக் காரணம் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் கழகத்தின் மீது கொண்ட நம்பிக்கைதான! அந்த நம்பிக்கை வீண்போகாமல் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டியது கழகத் தோழர்களின் கடமை. நம்மைத் தேர்ந்தெடுத்த பொதுமக்களுக்கு நாம் எந்த அளவுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப்பார்த்துக்கொள்ளவேண்டும்.

1959-ல் நகராட்சித் தேர்தல் முடிந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு நடந்த நிகழ்ச்சியொன்று! ஒருநாள் இரவு மணி இரண்டிருக்கும். அண்ணா வீட்டில் அவருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு காரில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறேன். மழை கனமாக பெய்துகொண்டிருக்கிறது. இடி! மின்னல்! ஒரே பயங்கரம்! நகரத்தில் தெரு விளக்குகளெல்லாம் அணைந்துபோய்க் கிடக்கின்றன. என்னுடைய கார் லாயிட்ஸ் சாலை வழியாக வீடு நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அந்தச் சாலையிலிருந்து தெற்குக் கோபாலபுரத்திலுள்ள என் வீட்டுக்குத் திரும்பும் இடத்திற்குக் கொஞ்ச தூரம் தள்ளி நடுச்சாலையில் ஒரு சிவப்பு விளக்கு எரிகிறது. கார் நிறுத்தப்பட்டது, சிவப்பு விளக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு கரிய உருவம் நிற்கிறது. உருவம் என் கார்அருகே வந்தது. 'அடடே, என்ன மணி, இங்கே நிற்கிறாய்?' என்று நான் வியப்புடன் கேட்டேன்.

"ஒன்றுமில்லை. சாலையில் உள்ள பாதாளச் சாக்கடையின் மூடி உடைந்து போய்க்கிடக்கிறது. தெருவிலோ விளக்கில்லை! மழையோ விடவில்லை. யாராவது தவறிப்போய் பாதாளச்சாக்கடையின் மூடியில்லாத இடத்தில் கால் வைத்தால் அவ்வளவுதான். பிறகு அவர்களைக் காப்பாற்றமுடியாது. அதற்காகத்தான் இங்கு எச்சரிக்கையாக நிற்கிறேன்."

என்று அவர் பாதாளச் சாக்கடையின் துவாரத்தையும் சுட்டிக் காட்டினார்.

எல்லையில்லாத மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது. 'மணி ரொம்ப சந்தோஷம்! உன்னைப் பார்த்து மற்றவர்களும் பொதுத் தொண்டினைக் கற்றுக் கொள்ளட்டும்" என்று உரக்கக் கூவினேன், அவ்வளவு உற்சாகம் எனக்கு!

எங்கள் பகுதியின் நகராட்சி மன்ற உறுப்பினர் கோ. சு. மணியைப் பற்றித்தான் இவ்வளவும் குறிப்பிடுகிறேன். உங்களுக்குத் தான் மணியைப் பற்றி நன்றாகத் தெரியுமே, துள்ளும் இளமைப் பருவம்—துடிக்கும் கொள்கை உணர்வு—தூய்மையான வாழ்க்கை அமைப்பு!

அந்தத் தோழன், நகராட்சி உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிகளைப் போலவே கழகஉறுப்பினராகவும் இருந்து செய்து முடித்த செயல்கள் ஏராளம்!

பதவியொன்றில் ஒட்டிக் கொண்டோம் என்பதற்காகக் கழகத்தை மறந்துவிடவில்லை. கழகத்தினன் என்பதற்காக எல்லாக் கட்சி மக்களுக்கும் தேவையான காரியங்களைக் கவனித்திட மறந்ததுமில்லை!

எங்கள் பகுதியில் கழகவேட்பாளராகத் தோழர் மணி, ஒரு பெரும் பணக்காரக் காங்கிரஸ் காரரை எதிர்த்துப் போட்டிபோட்டார். ஆதித்ராவிடர் குலத்தில் பிறந்த அந்த வீர வாலிபரின் உண்மை உழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் உயர்குடியினர் என எண்ணப்படுகிறவர்கள்கூட அவருக்கு வாக்களித்து வெற்றி தேடித் தந்தனர். அந்த வெற்றியில் மயங்கிக் கிடக்காமல் அவர் அல்லும் பகலும் வாக்களித்த மக்களுக்காக உழைத்தார்.

கழகத்தின் சார்பில் எத்தனையோ மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த மாநாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் வெற்றி பெற்றிருக்கின்றன

ஆனால்1962 ஜூலையில் சென்னையில் நடைபெற்ற மாவட்ட 4வது மாநாட்டுத் தொண்டர் படையினரைப்போல எந்த மாநாடும் அவ்வளவு சுறுசுறுப்பானவர்களைக் கண்டதில்லை. சென்னை மாநாட்டுத் தொண்டர்கள் சுறுசுறுப்பில் எறும்பு! பேச்சில் கரும்பு! செயலில் இரும்பு! எனப் பாராட்டப் பெற்றனர்கள் என்றால் அதற்கு மூலகாரணம் கோ. சு. மணிதான்!

தொண்டர் படைத்தலைவர் அவர்தான்! அவரைப் பாராட்டி பதக்கமொன்றைப் பரிசாக அளித்தார் அறிஞர் அண்ணா. அதனை பெற்றுக் கொண்டபோது தான் அவரது விரிந்த மார்பையும் நிமிர்ந்த தலையையும், ஒளிசிந்திய விழிகளையும் நான் கடைசியாகப் பார்த்தேன.

அதற்கு மறுநாள் மறியலில் போராட்டத்தில் கலந்துகொள்ள தஞ்சைக்குப்போய்விட்டேன். அங்கிருந்து திருச்சி சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டேன். அங்கு எங்களுடன் இரண்டு திங்கள் இருந்து விடுதலை பெற்ற தோழர் செழியன் எம். பி. அவர்கள் ஒருநாள் என்னைக் காண சிறைவாசலில் கோ. சு. மணி திடீரென இறந்துவிட்டார் என்ற செய்தியும் வந்தது. அந்த கொடுமையான தகவலை எனக்கு அறிவிக்கத்தான் தோழர் செழியன் வந்திருக்கிறார்.

என்னால் அறைக்குள்ளிருந்து வர முடியவில்லை. அங்கிருந்து சிறைவாயில் மூன்று நான்கு பர்லாங்குகளாவது இருக்கும். அவ்வளவு தூரம் நடப்பதற்குஅப்போது எனக்குச் சக்தியில்லை. இருந்த பலத்தையெல்லாம் அந்தத் திடுக்கிடும் செய்தி உறிஞ்சிவிட்டது. தள்ளாடித் தள்ளாடி நடந்தேன். இடை இடையே ஆங்காங்கு உட்கார்ந்து இருவரும் கட்டிக்கொண்டு கதறியழுதோம். நாங்களே ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டோம்.

இளம் மனைவி.

அரும்பு போல் ஒரு ஆண் மகவு.

முதிர்ந்த பெற்றோர்!

இவர்களையெல்லாம் தவிக்க விட்டு விட்டு வாலிபப் பருவத்தில் சிறைக் கோட்டத்தில் மணி செத்து மடிந்தான் என்றால் அத்தக் கொடுமையை எப்படித்தான் தாங்கிக் கொள்வது?

சாகும் வயதா?
நோய் நொடியா?
வைரம் பாய்ந்த உடல்!
கட்டுக்குலையாத மேனி!

கரையான், இரும்பைத் தின்னுமா?

காலம், மணியைத் தின்றுவிட்டதே!

காலமல்ல காரணம்; கவனமின்மைதான் என்று திட்டவட்டமாகச் சொல்லலாம். சிறையில் இருக்கும் கைதிகளுக்காகஎல்லா வசதிகளும் செய்து தருகிறோம்; அதிலும குறிப்பாக அவர்களுக்கு மருத்துவ வசதி முதல்தரமாகக் கவனிக்கப்படுகிறது என்று அரசினர் கூறி வருகிறார்கள்.

அதுவெறும் வாய்ப் பேச்சேவிர வேறில்லை என்பதற்குச் சாட்சியாகவே எல்லாச் சிறைக் கோட்டங்களும் விளங்குகின்றன.

சிகப்பு
பச்சை
மஞ்சள்
வெள்ளை

என்று நாலைந்து வர்ணங்களில் தண்ணீர் ஊற்றி வைத்திருக்கிறார்கள், கோட்டால் மருந்துக் கலவை என்கிறார்கள்.

தலைவலி, வயிற்றுவலி, முதுகுவலி மூட்டிவலி எல்லாவலிக்கும் ஒரே மருந்து!

காய்ச்சல் காலரா எதுவானாலும் ஒரே தினுசு மருந்து!

கொஞ்சம்நல்லமனிதர்கள்டாக்டர்களாகவோ இருந்தால் அவர்கள் தயவில் நோயாளிக்கு உயிர் ஒட்டிக் கொண்டிருக்கும்.

இல்லையேல் அவர்களது முகத்தைப் பார்த்ததுமே நோய் பறந்துவிடும்—நோய்க்கு முன்பே உயிர் பறந்துவிடும்.

(வளரும்)

அன்பன்
கலைஞர்

த

நான் கண்ட அண்ணா

நமக்கு வெண்டக்காய் பிடித்தால், நம்முடைய அம்மாவுக்குக் கத்தரிக்காய் பிடிக்கலாம், மனைவிக்கு முருங்கைக்காய்மீது பிரியம் இருக்கும், மகனுக்குப் புடலங்காய் செய்தால்தான் ஆசை, இப்படி ஒரு குடும்பத்துக்குள் 'சிறு விஷயத்திலே' கூடப் பலதரப்பட்ட மனநிலைகளும் ஆசைகளும் இருக்கின்றன. பொதுவாழ்க்கை என்பது இலட்சோபலட்சம் "மனநிலை" களுடன் வாழவேண்டிய வாழ்க்கையாகும். வீட்டுக்கு மூத்தவர்களுக்குத் தெரியும், குடும்பத்தை நடத்த எப்படியெப்படி அனுசரித்துப்போக வேண்டியிருக்கிறது என்கிற உண்மை. அதேபோல சமூகம் என்கிற பெரிய குடும்பத்தை நடாத்தும் பொறுப்பேற்றவர்களுக்கு எவ்வளவு தொல்லைகள் இருக்குத்?

அண்ணா அவர்களை ஒவ்வொருவரும் தம்முடைய ஆசைக்கூண்டிலேயே அடக்கி வைத்து அழகு பார்க்க விரும்பலாம். நான் என்ன சொன்னாலும் அண்ணா கேட்பார்—என்னைக் கேட்காமல் அண்ணா எதுவும் செய்யமாட்டார்——எப்போது வந்தாலும் என்னுடைய வீட்டில்தான் தங்குவார்—எங்கே போனாலும் என்னைக் கூப்பிடாமல் போகமாட்டார்—என்று சொல்லி மகிழ நமக்கு ஆசையிருக்கலாம்.

ஆனால்,நம்மைப் போல, எல்லோருக்கும் ஆசையிருக்கலாமன்றோ

நம்ஒருவார்—ஆனால் அண்ணா 'பலருக்கான' ஒருவர்.பலருடைய விருப்பு வெறுப்புகளையும் அனுசரித்துப்போகவேண்டியவர், அவர்!

இந்தப் பாக்கியம் கிடைத்தற்கரிய ஒன்று என்றாலும், இது எவ்வளவு சிக்கலானஒன்று என்பதை எண்ணிப்பார்த்தால் விளங்கும். அவருடைய நிலையிலிருப்போர், பலருடைய மனநிலைகளையும் மதித்தேயாகவேண்டும்! ஏனெனில் பலரும் தமது இதயங்களையெல்லாம் அவரிடம் அர்ப்பணித்திருக்கிறார்களே!!

அண்ணாவுடன் நெருங்கிப்பழகி அவருடைய இருதயத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பு பெற்றவர்கள், கூடிய வரையில் தான் ஒதுங்கியிருந்து மற்றவர்கள் அண்ணாவுடன் பேசவும் பழகவுமான சந்தர்ப்பத்தை உண்டாக்க வேண்டும்.

ஆரம்பத்தில், எனக்கு, இந்த உணர்வு கிடையாது! இதனால், எங்கேயாவது போனால் நம்மைக் கூப்பிடாமல் போய்விட்டாரே, ஊருக்குப் போய்வந்தவர் வந்து நிற்கும் நம்மிடம் ஒரு வார்த்தைக் கூடப் பேசாமல் மற்றவர்களிடம் பேசிக்கொண்டேயிருக்கிறாரே, என்று கிலேசமும் வேதனையும அடைவதுண்டு. ஆனால், பிறகுதான் நான் தெளிவுப்பெற்றேன்!

அதுமுதல், நானும் 'பிரச்சினை' யாக மாற விரும்பவில்லை. கூடிய வரையில் சிக்கலான நேரங்களில் அவருடைய சிக்கல்களைக் குறைக்கும் விதத்தில் நானே ஒதுங்கிக்கொள்வேன்.

அண்ணாவுடனிருந்து பழகுகின்றவர்கள் கூடிய வரையில் 'ஒதுங்கி'க்கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பங்கூட. பலர் பேசவும், உரையாடவும் சந்தர்ப்பங்களை நாம் உண்டாக்கிவிட வேண்டுமே ஒழிய 'இடமடைச்சானாக' நாம் இருத்தலாகாது. அண்ணாவிடமிருந்து பல பிரச்சினைகளில் நான் ஒதுங்கக் கற்றுக் கொண்டதற்கு இதுதான் காரணமாகும்!!

யாரிடம் அண்ணா அதிகப் பிரியமும் அன்பும் காட்டுகிறாரோ அப்படிப்பட்டவர்கள் தங்களது சொந்த உரிமைகள் சிலவற்றை விட்டுக் கொடுத்துத்தானாக வேண்டும். இது அண்ணா அவர்களுடைய சிரமங்களைக் குறைக்க நாம் செய்ய வேண்டிய முக்கிய கடமையாகும்.

இந்த உணர்வை நான் கொண்டபிறகு, பல சமயங்களில் நான் தொல்லைகளுக்கு ஆளானது உண்டு! ஒருசமயம் 'திராவிட நாடு' பொங்கல் மலர் வேலை தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. சில பக்கங்களை சென்னையிலே அச்சுக் கோர்த்து அச்சடிக்கலாமென்று திட்டம் போட்டோம். அதன்படி சென்னை டவுனில் அப்போது என். வி. நடராசன் அவர்கள் குடியிருந்த வீட்டுக்கு எதிரிலிருந்த ஒரு அச்சகத்தில் கொடுத்திருந்தோம். அண்ணாவுக்குத் தான் எழுதிய 'மேட்டர்' களின் 'புரூப்'களைத் தானே பார்த்துத் திருத்தினால் தான் திருப்தி வரும். இதனால் என். வி. நடராசன் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

'மேட்டர்'களைச் 'செட் அப்' செய்து பாரம் முடுக்கும்போது, கூடயிருந்து நான் சொல்கிறபடி அமைத்தால்தான் எனக்குத் திருப்திவரும்! இதனால், 'திராவிட நாடு' அலுவலகத்தில் நான் தூங்காத இரவுகள், ஏராளம். (இப்போது அந்த வலிவும், உடல் நலமும் இல்லையே யென ஏங்குகின்றேன்...) அந்த ஆசையால், அந்த அச்சகத்துக்குள்ளே கம்பாசிடர்களிடம் இருந்தபடி 'இப்படி அடுக்குங்கள், அந்தப் படத்துக்குக் கீழ் இந்த மேட்டரைப் போடுங்கள்' என்று சொல்லி வேலை வாங்கிக்கொண்டிருந்தேன்.

மாலை மணி ஏழாயிற்று! அண்ணா எதிர் வீட்டில்தானே யிருப்பார் என்றெண்ணியபடி வெளியேவந்தால் காரில்லை. என். வி என். வீட்டிலே கேட்டால் ஏதோ நாட்டியம் பார்க்க தோழர் சம்பத்தோடு அண்ணா போய்விட்டார் என்றார்கள்.

எனக்குக் கடும் எரிச்சல்! எதிரே ஒருவன் பகல் முழுதும் நின்றுகொண்டு வேலை செய்துகொண்டிருக்கிறான், என்னை அழைத்துக்கொண்டு போகாவிட்டாலும் சொல்லிக்கொண்டாவது போகக் கூடாதா என்று வேதனைப்பட்டபடி உள்ளே 'பிரசு'க்குப் போய்விட்டேன்.

அந்த அச்சக முதலாளி இரவு நேரங்களில் உள்ளே வேலைநடைபெறுகிறதென்றால் வெளியே கதவை சாத்திப் பூட்டுப்போட்டுக் கொண்டு போய்விடுவது வழக்கமாம்! எனக்கு இது தெரியாது!! இரவு பத்து மணிக்கு, கண்விருக்கையும் சிகிரெட்டும் வாங்கிவரச் சொல்லலாமென விரும்பியபோது தான் இந்த உண்மை எனக்குத் தெரிந்தது.

அண்ணா வந்த பிறகு சாப்பிடப் போகலாம் என்றிருந்ததால் இரவு சாப்பாடு வேறு இல்லை! கதவுகளோ, சாத்தப்பட்டு பூட்டப்பட்டு விட்டன. உள்ளேயிருந்து பார்த்தால் கார் வந்து நின்றதும் அண்

(6-ம் பக்கம் பார்க்க)

10

பாரிஸ் பட்டணத்தில் பாரே அறிந்திராத பயங்கரங்கள் நடந்து கொண்டிருந்த அச்சமயம் வெர்சேல்ஸ் நகரில் வீற்றிருந்த மன்னன் லூயி என்ன செய்து கொண்டிருந்தான் தெரியுமோ? இங்கே மனித வேட்டையாடப் பட்டுக் கொண்டிருந்த சமயம் ராசாதிராசர் மிருக வேட்டையாட பரிவாரங்களுடன் சென்றிருந்தார்! அநேகமாகப் படாடோபங்களுடன் சென்று, வெங்கையுடன் வருவது வழக்கமாம்!! அன்றும, அவ்வண்ணமே திரும்பிவந்து, தன்னுடைய அழகான 'டைரி'யை எடுத்து, "ஒன்றுமில்லை!" என்று முததுப் போல் எழுதிவிட்டு, (லூயி பெற்றிருந்த ஒரு நல்ல பழககம் இது!) விருந்து அருந்திவிட்டு, சோம்பல் முறித்தபடி சொகுசாகப் படுக்கைக்குச் சென்று விட்டார்!!

பாஸ்டிலி விழுந்ததும், அந்தக் கொடுங் கோட்டையின் சாவிகள் ஒரு நீண்ட கம்பில் கட்டப்பட்டு மக்களுக்குக் காட்டபபடுவதும், இன்னொரு குத்தீட்டியில் குவலயமே அஞ்ச வாழ்ந்த பாஸ்டிலி கவர்னரின் தலைகுத்தப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதுமான செய்திகள் எதுவும், அன்று நள்ளிரவு வரையில் பாரிசிலிருந்து பன்னிரெண்டு மைல்தொலைவிலேயிருந்த அரசரின் அரண்மனையான வெர்சேல்சுக்கு எட்டவில்லை!!

வேட்டையில்வந்த சோர்வினால் 'அருமந்த' அரசர் அன்றைக்கென்று கொஞ்சம் சீக்கிரமாகவே தூங்கப் போய்விட்டார்! குறட்டை விட்டபடி குஷி'யாகத் தூங்கிக் கொண்டிருந்தபோது, பயங்கரமான இரவில் படபடவென்று கதவைத் தட்டினான் பணியாள்.

"மன்னர் மன்னவா! இந்த வேளையில தங்கள் தூக்கத்தைக் கலைப்பதற்காக என்னைமன்னியுங்கள்!" என்று முகமன் கூறிவிட்டுச் சொன்னான், "பாஸ்டிலிவிழுந்தது. கவர்னரின் தலை துண்டிக்கப்பட்டு கம்பொன்றில் குத்தி ஊர்வலமாகப் போய்க் கொண்டிருக்கிறது!" என்று.

"கலாட்டா ஆரம்பித்தருக்கிறது பாரிசில். அதுதானே அவசரத்தோடுசொல்லவந்த செய்தி" எனக் கேட்டான் மன்னன்.

"கலாட்டா இல்லை மன்னவா! புரட்சி மூண்டு விட்டது!" என்று பொங்கும் பரபரப்புடன் புகன்றான் பணியாள்.

அரண்மனைக்குள் செய்தி பரவியது! அதுமுதல் தூக்கம் கலைந்தது! திடுக்கிடும் செய்திகள் 'எப்போ வருமோ?' என்று எதிர் பார்த்த நிலைக்கு ஆளாயிற்று அரண்மனை. பிரபுக்கள்பலர், அரசனின் சகோதரர்கள் இருவர், பிரான்சை விட்டு இத்தாலி, ஸ்விட்சர்லாந்து ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற இடங்களுக்கு ஓட்டம் எடுக்கலாயினர்! இந்தச் செய்திகள், பாரிசுக்கு வர வர, பயமறியா புரட்சி வீரர்களுக்குக் கொண்டாட்டமாயிற்று!

'முழ்கும கப்பலைவிட்டு எலிகள் ஓட்டம எடுக்கின்றன" என்றுபுரட்

ஆரங்கண்ணல்

சித் தலைவர்கள் வர்ணித்தார்கள் தங்களுக்குப் பயந்து இதுநாள் வரை தர்பார் நடாத்திய பிரபுக்கள் எடுக்கின்றனர் ஓட்டம்என்று கேட்ட மக்களுக்கும் இன்னும் உற்சாகம அதிகமாயிற்று!!

குழப்பம், வதந்திகள்,பயமுறுத்தல்கள்—இவைகளுக்கு மத்தியிலே மன்னன் லூயி எப்போதும் போல் அமைதியாகவே காணப்பட்டான். செய்திகள் பயங்கரமாகவரவர அவனும் பரபரப்படையவில்லை. அவன் மனதில்அப்போதும் ஒரேஒரு வாசகமே உருண்டு கொண்டிருந்தது. 'என் குடிமக்களின்குருதி வீணாகக்கூடாது.என்ன நேர்ந்தாலும ஒரு உள்நாட்டுப் போர் மூளவிடமாட்டேன்" என்கிற வாசகம்தான் அது.

ஒவ்வொரு நாளும் அவனுடைய அமைச்சர்களிடம், "இரத்தம் சிந்துவதே கூடாது," என்கிற வாசகத்தையேத் திருப்பித் திருப்பிச் சொல்லி வந்தான். ஆனால் அஞ்சியோடிய அவன் தமபிகளோ அடைக்கலமிருந்த வெளிநாடுகளில்இருந்தபடி "விடமாட்டோம்! பழிக்குப் பழி வாங்குவோம்! பயல்கள் ஜாக்கிரதை" என்று பயமுறுத்தல்களை அறிக்கைகளாக்கி, எரியும் தீக்கு எண்ணெய் வார்த்துக் கொண்டிருந்தனர். நாளாக ஆக பிரான்சிலிருந்து ஓட்டம் எடுக்கும் பிரபுக்கள் தொகை அதிகமாயிற்று! அப்படிப் போனவர்களிமிருந்து, 'பயமுறுத்தல்'கள் படையெடுத்துக் கொண்டிருந்தன பிரான்சுக்குள்.

பாஸ்டிலி விழுந்த சில நாட்களுக்கெல்லாம் வெர்சேல்ஸில் கூடிய தேசீய சட்டசபை ஐம்பது பேர் கொண்ட ஒரு தூதுக் குழுவை அனுப்பி, பாரிஸில் நடப்பதுபற்றிய முழுவிபரமும் சேகரித்துவரச் செய்வதென்று தீர்மானித்தது. வந்த தூதுக்குழு பாரிசே மாறிப் போயிருப்பதைக் கண்டது! கடைகள் யாவும்மூடப்பட்டுக் கிடந்தன, ஆங்காங்குபல குழிகள் வெட்டப்பட்டுக் கிடந்தன—மன்னனின் படைகள் படையெடுத்து வந்தால் உட்கார்ந்து சுடுவதற்குத்தான் அந்தப் பள்ளங்கள்! அத்தகைய போருக்குப் பாரிஸ் மக்கள் தயாராகிக் கொண்டிருந்தனர்.

நடக்கும்கொள்ளைகளைத் தடுப்பதெற்கென்று முன்பே நிறுவப்பட்ட 'தேசீய பாதுகாப்பினர்' புரட்சியைச்செம்மையாக்குவதில் ஈடுபட்டனர். அப்படையில் தினம் ஏராளமானோர் சேர்ந்து எண்ணிக்கை ஐம்பதினாயிரத்தைக் கடந்தது. அப்படைக்குத்தளபதியாக நகர அதிகாரிகள் மார்க்விஸ்டி லாவேயட்டேயை நியமித்தனர்- ஒரு மாதத்துக்கு முன்புதான் 'மூன்றுவதுஎஸ்டேட்டான' மக்கள் பிரதிகளுடன் தானும சேர்ந்து இருந்தான் அவன். அதன் காரணமாக தேசிய சட்ட சபையின் துணைத்தலைவராகவும் ஆக்கப்பட்டிருந்தான்.

அமெரிக்காவில் நடந்த புரட்சியில் பங்குகொண்ட பெருமையிருந்ததுலாவயட்டேயுக்கு! ஜெனரல் வாஷிங்டனுக்கு ஆதரவாக, பிரெஞ்சுப் படைகளை தனது 21-வது வயதில் நடத்திச் சென்றவன் அவன். ஆனால் சொந்த நாட்டில் துவங்கியிருக்கும் புரட்சியில், அவன் தீரமோ வீரமோ விளங்கவில்லை. அவன் புரட்சியின் அளவையும் வலிவையும் குறைத்தே மதிப்பிட்டான்! அவனைத் தளபதியாக்க வேண்டாமென்று அரசனுடைய பிற்போக்குப் பிண்டங்களான மந்திரிகள் நல்ல ஆலோசனை யொன்றைச் சொல்லியும் அரசன் அதைச் கேட்கவில்லை. லாவேயட்டேயை நியமித்தது மட்டுமல்ல, கொலைக்களம் போல் காட்சி அளிக்கும் பாரிசுக்குள்தானே நேரில் போய் வருவதென்றும் மன்னன் தீர்மானித்தான்!

(வளரும்)

—o—

✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ணாவும் சம்பத்தும் சிரித்துக் கொண்டு போவதும் தெரிகிறது!

நானோ, உள்ளே! பசியோடு!! அட, பசியையாவது தாங்கிக் கொள்வோம் இரவு முழுதும் கண் விழிக்க 'டீ'யாவது உண்டா என்றால், இல்லை. என்ன செய்வேன்? அந்த அச்சகத்துக்குள் உட்கார்ந்து காலை நீட்டிக்கொண்டு கொஞ்சம் கண்ணைமூடலாம் என்றாலோ, அதற்கும் இடமுமில்லை, வசதியுமில்லை!!

இரவு முழுதும், நின்றுகொண்டே, அச்சுப் பொறியைப் பார்ப்பதும் அடிக்கும் பசியை அழுக்குவதும், மூடும் இமைகளைக் கூண்டிப்பதுமாக, இருந்தேன். பெரிய கொடுமை அது! அதற்குச் சமமான கொடுமையை, பண்டித நேரு வந்தபோது மயிலைத் தொகுதியிலுள்ள அடையாறு'லாக்அப்' பில்தான் நான் அனுபவித்தேன்! பண்டித நேரு அவர்களுச்குக் கருப்புக் கொடி காட்ட இருந்ததையொட்டி அண்ணா முதலியோர் கைது செய்யப்பட்டு, அடையாற்றிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் பூட்டப்பட்டோம். குடிகாரர்கள், ரௌடிகள், முதலியவர்களுக்காக சிறிய 'லாக்அப்'புகள் போலீஸ் ஸ்டேஷன்களில் இருக்கும். அப்படி இரண்டு லாக்அப்புகள் உண்டு. ஒன்றில், அண்ணா, கருணாநிதி சம்பத் போன்றவர்கள். ஓரளவுக்கு அது சுத்தம் செய்யப்பட்டிருந்தது. எதிர்த்தாற் போலிருந்ததில் நானும் மற்றவர்களும். ஒரே, சிறுநீர் நாற்றம்! அண்ணாவும் கருணாநிதியும் தூங்காமலிருந்தார்கள். சம்பத் விட்ட குறட்டை சப்தம்...!! நானும் தூங்கவில்லை...

நான் தேர்தலில் போட்டியிட்ட போது வோட்டுக் கேட்க அடையாறு சென்றபோதும் சரி, இப்போது 'எம். எல். ஏ' வாகச் செல்லும்போதும் சரி அந்தப் 'பொல்லாத இரவு' மட்டும் கவனத்துக்கு வராமல் இருப்பதில்லை!

(தொடரும்)

தமிழோவியம்

இரந்து பெறும் சிறப்பு!

பறை அறையப்பட்டுவிட்டது!

படை இரண்டும் மடையுடைந்த காட்டாறுபோல் பாய்ந்து மலைந்தன.

நேற்றுவரை, அருவியிலே,புனலாடியவர்கள், சீற்றம் கொண்டு எழுந்து செறுபகைவரின் குருதியிலே குமரியாடினார்கள்.

நீல மாக்கடலின் நிறத்தை மாற்ற எண்ணி, அலை மண்டிய செந்நீர் வெள்ளத்தை அப்பக்கம் திருப்பிவிட்டது அந்தவீறுகொண்டெழுந்த படை!

எதிரிகளின் தலைகளைப் பனங்காய் சீவுவதைப்போல் சீவி உதிரச் செய்தான் அந்த மாவீரன்!

நாவல் மரத்தின் கிளை அசைந்தால் கருமை வண்ணக் கனிகள் ஆலங்கட்டி மழைபோல் உதிருமல்லவா?

அவன் வாள் அசைந்தது, சடசடவெனச் சரிந்து விழுந்தன தலைகள்!

அவனுடைய தாயகத்து தன் மானத்தைப் பழித்தோரின் மார்பிலே அவன் சுழல் வாள் குளித்துக் குளித்துத் திளைத்தது!

கண்ணோக்கியத் திக்கெல்லாம் நிணச்சேறு தேங்கிக் காணப்பட்டது!

காட்டாற்றிலே மிதந்துவரும் நுரைத் திட்டுகள் போல் எதிரிகளின் மண்டை ஓடுகள் பயணம் செய்தன. கால்வேறு தலைவேறாகப் பிய்ந்து சென்ற உடலங்கள் காற்றிலே உருமாறிப் பறக்கும் முகிற் கூட்டங்களை நினைவூட்டின.

குருதியாற்றிலே அடித்துச் செல்லும் எதிரிகளின் எலும்புத் துண்டங்கள், எதிர் நீச்சலிடமுடியாமல் சுழலோடு செல்லும் பலவகை மடுமீன்களை நெஞ்சிற் கொண்டுவந்தன.

எங்கெங்கும் பேரொலி,

எங்கெங்கும் பிணக்காடு,

எங்கெங்கும் ஊண் நாற்றம்!

அந்த மறவன் வெற்றிக் களிப்புடன் புன்னகை சிந்தச் சுற்றிச் சுழன்று வந்தான்.

'எங்கே என் அன்னைத் திருநாட்டின் எழிலைப் பழித்த சங்கை கெட்டோர்?' இப்படி வினா எழுப்பின அவன் செவ்விதழ்கள்!

'எலும்பில்லாநாவால் எம்மைப் பழித்துப் புலம்பியவர்கள் இனி இருக்குமிடம் எங்கே?' என்று சிலம்பொலிப்பதுபோல் சிரித்தான் அவன்.

ஆனால் போரோசை இன்னும் குன்றவில்லை,

மின்னல் ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளும்போது இடியொலி முழங்குமல்லவா?

வேல்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டன, விண்ணதிரும் அந்தப் பேரொலி,விருந்துண்ணச் சுற்றிவரும் கூளிகளுக்கு இசையமுதமாக இனித்தது.

ஆம். இன்னொரு புறத்திலே எதிரிப் படையின ஒரு பகுதி தன் படையுடன் மோதுவதை அவன் விழிகள் கண்டுவிட்டன.

வாளுக்கு விருந்து கிடைத்துவிட்டதே என்று பூரித்த அவன தோள்கள் சிலிர்த்துச் சூளுரைத்தன!

கீரைத்தண்டு வளர்ந்த தோட்டத்திலே சேரநாட்டு வேழம் புகுந்தது போல் ஆயிற்று.

நீரைக் கிழித்தோடும் நெடிய திமிங்கிலம்போல், பகைப் படையைக் கிழித்துக்கொண்டுசென்ற அவன் காலடிகளில் உடற் பிண்டங்கள் குவிந்தன. கீழே நின்று போரிட்டாலும், மேலே இருந்து காணும் கழுகுகளுக்கு அவன் வாரியளிக்கும பாரியானான்.

நேரம் பறந்துகொண்டிருந்தது.

எங்கிருந்தோ வந்த எதிரிகளின் புதுப்படைகள் அவனைச் சூழ்ந்து கொண்டது. கானுற்று மணலில் திரிந்த கொம்புமான் கண்மூடித் திறப்பதற்குள், வந்து சூழ்ந்துவிட்ட மேல வெள்ளத்தைத் தாங்கிக்கொள்ள இயலுமா?

அயராத அவன் தோள்கள் அயர்ந்தன!

சோர்வு அவனைத் தோயச்செய்தது!

என்ன செய்வான் அவன்?

தள்ளாடிற்று அவன் உடல்' அவன் எஃகு நெஞ்சமோ வாளைச் சுழற்றிக்கொண்டே இருந்தது.

எட்ட இருந்து எழுந்துவந்த ஏதோ ஓர் இரைச்சல் கிட்டே நெருங்கி வந்தது. எதிரிப் படையைச் சேர்ந்த போர்த்தளபதி, ஏழு குதிரைகள் பூட்டிய நெடுந் தேரில் காற்றாகப்பறந்துவந்தான். அவன் தோற்றத்தில் வீறு தென்பட்டது. எதிரே எவர் எவர் இருக்கிறார்கள் என்று அவன் இம்மியும் எண்ணவில்லை.

பாய்ந்து வந்த தேர், ஓய்ந்து தள்ளாடிக்கொண்டிருந்த அந்த வீரன்மேல் ஓடி ஏறிற்று!

செம்மாந்து நின்ற செழித்த வாழை மண்ணிலே சாய்ந்தது!

தேர்ச்சக்கரம் அந்த மாவீரனின் தலையின்மேல் ஏறிவிட்டது!

அப்பப்பா! அந்த நெருக்கடியான நேரத்திலும் 'என் தாயகம் வெல்க!' எனறு சிந்துபாட அசைந்தது அவன் வாய்.

ஆனால் நா அசையவில்லை.

விழிகளிலிருந்து குருதி வெளியே பாய்ந்தது.

செவிகளின்மேல் தேர்ச்சக்கரம் ஆழப்பதிந்துவிட்டதால் கேள்விச் செல்வமும் அவனை விட்டுப் பிரிந்துவிட்டது.

இதற்குள் அன்றைய போர் முடிவுற்றதாகச் சங்கொலி எழுப்பப்பட்டது.

எஞ்சிய படைகள் பாடிவீடு திரும்பின.

எந்தத் தலைவனின் சுட்டுவிரலுக்கு அடிபணிந்து, அந்த மறவன் போர்க்களம் புகுந்தானோ, அந்த அரசன் சாய்ந்து கிடந்த தன் படையின் கணக்கறியப் போர்க்களம் புகுந்தான்.

தச்சன் பட்டரையில் மரங்கள் அறுபட்டுக் கிடப்பதுபோல், வெங்களத்தில் வீரர்களின் மெய்த்துண்டங்கள் அங்கொன்றும் இங்கொன்றும் சிதறிக்கிடந்தன.

சற்றுத் தொலைவினில் அந்த மாவீரனின் உடல் மெல்ல அசைந்து கொண்டிருந்தது.

அருகே நெருங்கினான் அரசன்

சாவின்மடிக்குத்தாவிக்கொண்டிருக்கும் அந்தத் தன்மானக் காளையின் சிதைந்த உடலைக் கண்டு நெக்குருகினான மன்னன்.

தலைவனின் ஆணைக்குத் தாள் பணிந்து, சாவைப் பரிசாக ஏற்ற அந்த வீர இளைஞனுக்குத் தன் நன்றியுணர்வைத் தெரிவித்துக் கொள்ளக் கருதினான்.

இறுதித் துடிப்பால் அசையும் அவன் உடலை மெல்லத் தூக்கித் தன் மார்பில் அணைத்துக்கொண்டான்.

'வெற்றி மகனே! உன் மாவீரம் வீண் போகுமா? உன் ஈடில்லாத் தொண்டுக்கு எந்த வகையில் நான் நன்றி கூறப்போகிறேன்?' இப்படிக் கூறுமல் கூறிக்கொண்டே அவன் விழிகளிலிருந்து உதிர்ந்தன கண்ணீர்த் துளிகள்!

விழிப்புலனும் நாப்புலனும் முழுக்க மழுங்கி, இறப்பின் முகட்டுக்குப் பறந்துகொண்டிருந்த அந்த வீரனின் உடல்மேல் சிந்திய விழிநீர்த் துளிகள், அவனை இன்பத் தேனாற்றில் குளிப்பாட்டின!

'இரந்தேனும் பெறவேண்டிய தலைவனின் கண்ணீரைப் பெறும் பேற்றை இன்று பெற்றுவிட்டேன். இனி இந்த உலகில் வேறு எந்த இன்பம் வேண்டியுள்ளது?' என்ற அமைதிப் பெருக்கால் அவன் முகத்திலே மகிழ்ச்சிக் கோடுகள் மின்னலிட்டன!

அடுத்த நொடியே அவன் உடலின் இறுதித் துடிப்பும் ஒடுங்கிவிட்டது.

வீரச் சாவுக்கு இறந்து நிற்கும் இந்தத் தீரச சிங்கத்தைத் தமிழ் மண்ணிலன்றி வேறு எங்கே காணமுடியும்?

'புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்
பின் சாக்காடு
இரந்து கோள் தக்க துடைத்து'

—திருக்குறள்

கா. வேழவேந்தன் B.A

கேள்வி பதில்

கே: திராவிட முன்னேற்றக் கழகம் சீக்கிரம் தடை செய்யப்படும் என்று சொல்கிறார்களே' அப்படி வந்தால் என்ன செய்வீர்கள்?

விவேகி,
சென்னை-3.

ப: தென்னாட்டில் காங்கிரசுக்குப் பலமான எதிர்கட்சியாக விளங்கிவரும்கழகத்தின் சக்திகளைச் சிதறடிக்க வேண்டும் என்பதே ஆட்சியாளர் ஆசை! அதற்கு இடங்கொடுககாமல் 'பலத்த எதிர்க்கட்சி'யாக விளங்க மார்க்கங்களா இல்லை? வீம்பைவிட விவேகமான வழிகளே சிக்கலான சமயங்களில் நமக்குத் வேவையாரும்!

* * *

கே: குமரியில் கூடியமுதலமைச்சர்கள் கூட்டத்தில் பிரிவினையைச் சட்ட விரோதமாக்க வேண்டும் என்று தீர்மானித்ததைக் கண்டித்த தமிழக அரசியல் தலைவர் யார்?

வி. மலைசாமி,
வேலூர்.

ப; தோழர் ம. பொ. சி. ஒருவர் தான்!

* * *

கே: தோழர் சம்பத்தின் இன்றைய நிலை என்ன?

தியாகு,
விருதம்பட்டு.

ப: இரண்டுங்கெட்டான் நிலை!

—0—

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டிக் கொடுப்பவனைப் பூட்டு! அதை விட்டு விட்டு, "அன்பா! நண்பா! உதாரா! உத்தமா! இந்தா என் அடுக்குப்பானையிலிருப்பது. இந்தா என் கையில் கிடைத்தது. என்ன வேண்டும் உனககு? இரத்தமா! ஆளா! பிரச்சாரமா! இதோ ரெடி!" என்று பாடுபடும் கழகத்தின் மீது பாய்ந்தால் கைகொட்டிச் சிரியாரோ, பிறர்!!

என்ன நினைப்பான் அமெரிக்காக்காரன்—பிரிட்டிஷ் தீவினர் என்ன பேசுவார்கள்-மற்றவர்கள் தான் எப்படி எண்ணுவார்கள்?" "பாரும்! பாரும்! ஜனநாயகம் காப்பதற்காகப் போர் என்கிறார் நேரு. பசு போல அவர் சொல்படி வேண்டிய ஒத்துழைப்பைத் தருகிறது தி மு. சழகம. அதை ஒழிப்பதுதான் இப்போது பெரிதாகப்படுகிறது 'தென் மண்டல' முதலமைச்சர்களுககு இதுதான் நேரு வளர்க்கும் ஜனநாயகம்!" என்று சீனுக்காரன் கைகொட்டி கேலி செயதால் பதில் சொல்லும் கட்டத்திலா நம்மை நாம் வைத்துக் கொள்வது!!

தேவையிலாத வேலை-அதிலும் அவசியமிலாத நேரம்-செய்ய வேண்டியது நிரம்ப கிடக்கிறது-இப்போது போய் கழகத்தை எப்படித் தடுப்பது என்பதற்காக, அதுவும் சுழகம் தன் நடவடிக்கைகளை நிறுத்திககொண்டிருக்கிற இச்சமயததில் ஏன் ஈடுபட வேண்டும் முதலமைச்சர்கள! இதற்காக ஏன் வாவேண்டும் டில்லியிலிருந்து லால்பகதூர்!!

எல்லோரையும் கூட்டவும்-எதிர்க்கட்சிகளையும் சேர்த்துப் பேசவும்-மக்கள் மத்தியில் பேரெழுச்சியை உருவாக்கவும்-லால்பகதூரின் வரவு பயன்பட்டிருக்கலாகாதா! குமரிமுனை வந்து, இந்தச் சில்லரைக்காச் சிந்தனையையும் நேரத்தையும் செலவழிக்க வேண்டும்!!

முன் போர்முறை திருவனந்தபுரத்துக்கு அருகிலுள்ள கோவளம் எனும் ஊரில் கடலில் குளித்துக் களிப்பு பெற்றாராம் லால்பகதூர்! அது போல இச்சமயமும் வந்து சென்றிருக்கலாம! டில்லியின் பளு-ஓயாத வேலை-ஐயோ பாவம், என்று அன்பும் பரிதாபமும்கூட ஏற்பட்டிருக்கும்!

தென்மண்டல அமைச்சர்கள் சென்ற கிழமைதானே டில்லிக்குப் போய் வந்தனர்! ஆற்றுப் பிரச்னை, மொழிப் பிரச்னை, போலீஸ் பொதுப்படை ஆலோசனை ஆகியவைகளை அங்கேயே நடத்தியிருக்கக்கூடாதா!

"பேச்சு ஏன்? செயலில் இறங்கு"

"சிந்தாதே பணத்தை சேமித்துக் கொடு!'

'நேரம் முக்கியம்! வீணாக்காதே!.'

—என்று 'அனுதினமும், ஏடுகளில், விளம்பரங்கள் பார்க்கிறோம்.

வீண் பேச்சு—நேரமும் விண்—அதைவிட இந்த நெருக்கடியான நேரத்தில் இக்கூட்டத்துக்காக 'ஆன செலவும்' அநாவசியம் எனறே நாடும் நல்லோரும் கருதுவர்! செலவு குறைக்கச் சொல்லும் அரசு. இப்படியெல்லாம் நிதியையும் நோத்தையும் செலவைச் செயவது தேவையா—வேண்டாமா — என்பதை, இனியாவது, எண்ணிப பார்க்க வேண்டும்!!

—*⁂*—

கதைக் கொத்து
காவியச் சொத்து

என வியக்கும் வகையில் - எழில் மணக்கும்! இன்பம் பொங்கும்!

'அறப்போர்'
பொங்கல் மலர்!

விலை
40
காசுகள்தான்

12-1-63ல்
வரும்

அறிவூட்டும் அற்புதக் களஞ்சியம்!

அழகான வண்ண முகப்பு

இந்த அழகான மலர், 25 சத விகிதம் கழிவு நீக்கி முன்பணம் அனுப்பியோருக்கே.

பில்பாக்கி உள்ளோருக்கும் அனுப்ப இயலாது.

தனிமலர் வேண்டுவோர் 40 காசுகள் அனுப்புக.

பொறுப்பாளர் அறப்போர் சென்னை-18

ஆசிரியரும். வெளியிடுபவரும் : இராம. அரங்கண்ணல், 9-ஏ. டாக்டர் சர் சி. பி. ராமசாமிரோடு, அபிராமபுரம், சென்னை 18.
அச்சிட்டோர்: எம். பி. சதாசிவமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6